நாள் 13.12.2024 **CC** 332/2019 அ.சா .1

பெயர் கன்னிமுத்து

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில்லை

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் கு.வி தொடர்ச்சி)

(1) கண்ணன் மற்றும் அவரது மனைவி அங்கு குடியிருக்கவில்லை என்றால் சரிதான். எனது பூமி வேறு பகுதி, பொது தடம் வேறு பகுதி என்றால் என் பூமிக்குள் தான் தடம் உள்ளது. கிழமேல் தடத்திற்கு இருபுறமும் என் பூமி உள்ளதா என்றால் தடத்திற்கு வடகோட்டில் தான் என் பூமி உள்ளது. என் பூமியை ஒட்டி தான் கிழமேல் தடம் உள்ளது. நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த போது மருத்துவரிடம் என்னை மூன்று நபர்கள் தாக்கியதாகவும், என் பூமியில் வைத்து தாக்கியதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான்கு பேர், என் பூமியில் வைத்து தான் அடித்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் சம்பவத்தைப் பற்றி கேள்விப்பட்டு தான் என் இரு மகன்கள் வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை மயிலத்தாள் பார்த்ததாக குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன். எந்த வாகனத்தில் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சின்ன மகன் வைத்திருந்த கார் மூலம் சென்றேன்.

(2) எதிரி கண்ணனும் மருத்துவமனையில் நான் தாக்கியதாக சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மரக்குச்சி வேறு, தடி வேறு என்றால் இல்லை இரண்டு ஒன்று தான். உருட்டுக்கட்டை என்றால் வேறு என்றால் சரியல்ல மரக்குச்சி, தடி, உருட்டுக்குட்டை எல்லாம் ஒன்று தான். எங்கள் பூமிக்கு அருகில் உள்ள கண்ணன் பூமியை அவர் நான் தொந்தரவு செய்ததால் விற்பனை செய்து விட்டார் என்றால் சரியல்ல. ஆனால் தற்போது அவர் விற்பனை செய்து சுமார் 3 வருடங்கள் இருக்கும். நான் வீண் பிரச்சனை செய்ததால் தான் கண்ணன் பூமியை விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி பூமியை கண்ணனுக்கு யார் வாங்கித்தந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மருத்துவமனைக்கு போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் இரவு வந்தார்கள். நேரம் தெரியவில்லை.

(3) எனக்கு அடிப்பட்ட வந்த ரத்தம் நிலத்திலும், எனது உடையிலும் சிந்தியதா என்றால் ஆமாம். அதை போலீசார் வாங்கினார்கள் என்றால் இல்லை. போலீசார் பார்த்துவிட்டு அதை தள்ளி வைத்து விட்டார்கள். நாங்கள் துணி உடுத்திக்கொண்டோம். நான் சொன்னபடி சம்பவம் நடைபெறவில்லை அவ்வாறு நடந்திருந்தால் ரத்தக் கறை படிந்த துணைகளை போலீசார் கைப்பற்றியிருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரி என்னை அடிக்கவும், திட்டவும் இல்லை, மிரட்டவும் இல்லை என்றால் சரியல்ல. எங்கள ஊரில் உச்சி மாகாளியம்மாள் கோவிலில் நடந்த கும்பாபிஷேக விழாவில் இரு தரப்பினருக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்ட நிலையில் நான் ஊர் கவுண்டர் சின்னச்சாமி தரப்பினருடன் இருந்தேன், மேற்படி சின்னச்சாமியின் எதிர்தரப்பினருடன் 3, 4 எதிரிகளின் தந்தை அண்ணாமலை இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ஊருக்கு பொதுவானவன் ஆவேன்.

(4) 1ம் எதிரி கண்ணனுக்கு 3, 4 எதிரிகளின் தந்தை அண்ணாமலைசாமி தான் பூமியை விலைக்கு வாங்கி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாத. 3, 4 எதிரிகள் 1ம் எதிரிக்கு பூமிவாங்கி கொடுத்ததாலும், ஏற்கனவே கோவில் கும்பாபிஷேக பிரச்சனையில் எதிரிகள் மீது கருத்து வேறுபாடு ஏற்பட்ட காரணத்தினால் எதிரிகள் மீது பொய்யாக இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் புதிததாக கிணறு வெட்டியதால் நான் அவர்களிடம் தண்ணீர் கேட்டு அவர்கள் கொடுக்காத காரணத்தினால் எதிரிகள் மீது பொய்யாக இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.12.13 11:23:15 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

நாள் 13.12.2024 **CC** 332/2019 அ.சா . 2

பெயர் சரவணக்குமார்

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில்லை

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் கு.வி)

(1) மயிலாத்தாள் எனது அப்பாவின் அண்ணன் மனைவி பெரியம்மா என்றால் சரிதான். எனது பூமிக்கு பக்கத்தில் திருஞான சம்மந்தம், மற்ற மூன்றாம் நபர்கள் பூமி உள்ளது என்றால் சரிதான். போலீசார் எந்த தேதியில், எங்கு வைத்து என்னை விசாரணை செய்தார்கள் என்றால் 12.12.2016 ம் தேதி காலையில் கோவை அரசு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரணை செய்தார்கள். நேரம் ஞாபகம் இல்லை. நான் போலீசார் விசாரணையில் சம்பவத்தை கேள்விப்பட்டு நானும், என் தம்பியும் போய் பார்த்து என் பெற்றோரை கார் மூலம் உடுமலை அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக குறிப்பிட்டுள்ளது நான் சொன்ன வாக்குமூலம் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் வழக்கிற்காக பொய்யாக மிகைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

(2) எத்தனை மணிக்கு உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் மாலை நேரம் சென்றோம். நேரம் ஞாபகம் இல்லை. எனது தந்தை சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறாமல் நான் நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

(4) எங்கள் ஊரில் உச்சி மாகாளியம்மாள் கோவிலில் நடந்த கும்பாபிஷேக விழாவில் இரு தரப்பினருக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்ட நிலையில் நான் ஊர் கவுண்டர் சின்னச்சாமி தரப்பினருடன் இருந்தேன், மேற்படி சின்னச்சாமியின் எதிர்தரப்பினருடன் 3, 4 எதிரிகளின் தந்தை அண்ணாமலை இருந்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிரி கண்ணனுக்கு 3, 4 எதிரிகளின் தந்தை அண்ணாமலைசாமி தான் பூமியை விலைக்கு வாங்கி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3, 4 எதிரிகள் 1ம் எதிரிக்கு

பூமிவாங்கி கொடுத்ததாலும், ஏற்கனவே கோவில் கும்பாபிஷேக பிரச்சனையில் எதிரிகள் மீது கருத்து வேறுபாடு ஏற்பட்ட காரணத்தினால் எதிரிகள் மீது பொய்யாக இந்த புகாரை என் அப்பா கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் புதிததாக கிணறு வெட்டியதால் நாங்கள் அவர்களிடம் தண்ணீர் கேட்டு அவர்கள் கொடுக்காத காரணத்தினால் எதிரிகள் மீது பொய்யாக இந்த புகாரை என் அப்பா கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது பெற்றோருக்கு ஏற்பட்ட காயங்களுக்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.. VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2024.12.13 11:23:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

நாள் 13.12.2024 **CC** 332/2019 அ.சா . 3

பெயர் சண்முக சுந்தரம்

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில்லை

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் கு.வி)

(1) பொதுத் தடத்தில் 1ம் எதிரி கண்ணனை எனது பெற்றோர் நடக்கக்கூடாது என்று கூறிவிட்டார்கள் என்றால் பொதுத் தடம் என்று எதுவும் இல்லை. எனது பெரியப்பாவிற்கும், எங்களுக்கும் மட்டுமே மேற்படி பொதுத் தடம் பாத்தியம். அந்த பொதுத் தடத்தில் எதிரிகளுக்கு பாத்தியம் இல்லையா என்றால் ஆமாம். அவர்களுக்கு இல்லை. போலீசார் விசாரணையில் சம்பவம் நடந்த பிறகு நானும், எனது சகோதரரும் சென்று எங்கள் காரில் எனது பெற்றோரை உடுமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றால் நான் சம்பவ இடத்தில் இருந்தேன். நான் பார்த்து பின்பு அவர்களை மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தேன். நான் வழக்கிற்காக போலீஸ் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சம்பவத்தை மிகைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், எனது தந்தையும் நடக்காத சம்பவத்தை நடந்ததாகவும், நான் சம்பவ இடத்தில் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(2) எங்கள் ஊரில் உச்சி மாகாளியம்மாள் கோவிலில் நடந்த கும்பாபிஷேக விழாவில் இரு தரப்பினருக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்ட நிலையில் நான் ஊர் கவுண்டர் சின்னச்சாமி தரப்பினருடன் இருந்தேன், மேற்படி சின்னச்சாமியின் எதிர்தரப்பினருடன் 3, 4 எதிரிகளின் தந்தை அண்ணாமலை இருந்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிரி கண்ணனுக்கு 3, 4 எதிரிகளின் தந்தை அண்ணாமலைசாமி தான் பூமியை விலைக்கு வாங்கி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3, 4 எதிரிகள் 1ம் எதிரிக்கு பூமிவாங்கி கொடுத்ததாலும், ஏற்கனவே கோவில் கும்பாபிஷேக பிரச்சனையில் எதிரிகள் மீது கருத்து வேறுபாடு ஏற்பட்ட காரணத்தினால் எதிரிகள் மீது பொய்யாக இந்த புகாரை என் அப்பா கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் புதிததாக கிணறு

வெட்டியதால் நாங்கள் அவர்களிடம் தண்ணீர் கேட்டு அவர்கள் கொடுக்காத காரணத்தினால் எதிரிகள் மீது பொய்யாக இந்த புகாரை என் அப்பா கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது பெற்றோருக்கு ஏற்பட்ட காயங்களுக்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.12.13 11:23:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்